[1993 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 54, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

54—

அண்ணாமலைச் சேரியில் பறவைகள் சரணாலயம்.

*15998—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில் அண்ணாமலைச் சேரியில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1980 ஆம் ஆண்டு தமிழக அரசு அறிவித்த அறிவிக்கையின் அடிப்படையில், பழவேற்காடு பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டது. அந்த பழவேற்காடு பறவைகள் சரணாலயத்திற்கு உட்பட்ட பகுதியில் இருக்கிற ஒரு கிராமம்தான் அண்ணாமலைச்சேரி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எனது தொகுதியில் சுமார் 400 கோடி ரூபாயில் செயற்கைத் துறைமுகம் கொண்டு வந்து, தமிழகத்தில் தொழிற்புரட்சி கண்டு கொண்டிருக்கிற, நம்முடைய இதய தெய்வம், ஒப்பற்ற தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக அவர்களின் பொற்பாதங்களில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியைச் சேர்ந்த அண்ணாமலைச்சேரி கிராமம் கடற்கரையை ஒட்டியிருக்கின்ற கிராமம். பல்வேறு வெளிநாட்டுப் பறவைகள் எப்படி பழவேற்காடுப் பகுதிக்கு வருகிறதோ, அதைப்போல, அந்தப் பகுதியிலும், கண்ணைக் கவருகின்ற வகையில், வெளிநாட்டுப் பறவைகள் ஆண்டுதோறும் வருகின்றன. எனவே, அங்கே பறவைகள் சரணாலயம் அமைத்தால், வருங்காலத்தில், நல்லமுறையில் அன்னியச் செலாவணியை நாம் பெறலாம். மறைந்த முன்னாள் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்தில், இதற்கான செயல் திட்டம் எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரை அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. ஆகவே பல ஆண்டுகளாக பாதியிலே

1993 அக்டோபர் 28]

நிற்கின்ற நீண்டநாள் திட்டங்களிலே இன்றையதினம் முடித்து வெற்றி கண்டுகொண்டிருக்கிற இதய தெய்வத்தினுடைய பொற் கால ஆட்சியில் இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்து வதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப் பிடுகிற அண்ணாமலைச்சேரி, பழவேற்காடு சரணாலயத்தி னுடைய ஒரு பகுதி என்பதை மீண்டும் நான் நினைவுறுத்து கிறேன். அரசு ஆணை எண் 1247, வனம் மற்றும் மீன் துறை, நாள் : 22—9—1980 அறிவிக்கையின்—நோட்டிபிகேஷன்— அடிப்படையில், இந்தப் புறவைகளின் சரணாலயம் அறிவிக் கப்பட்டது. அண்ணாமலைச்சேரி அந்த இடத்திற்குள் உள்ளடங்கிய ஒரு கிராமம். எனவே முன்னிலை நீர்ப்பறவைகள் சரணாலயம் என்ற தகுதியைப் பெற்றுள்ள பழவேற்காடு சரணாலயத்திற்குள் இருக்கிற அந்த அண்ணாமலைச்சேரியும் வருவதால், தனியே அதற்கென நீர்ப்பறவைச் சரணாலயம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பழவேற்காட்டுப் பகுதியில் அமைக்கப்பட் டிருக்கின்ற அந்தப் பறவைகளின் சரணாலயத்தை மேற் கொண்டும் டெவலப் பண்ணுகின்ற வகையில் ஏதாவது திட்டம் நம்முடைய அரசிடம் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் தமிழக அரசு சுமார் ரூ. 6 லட்சம் செலவழித்திருக்கிறது. இந்த ஆண்டும் ரூ. 6 லட்சம் செலவழிப்பதற்கான ஒரு நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசினுடைய உதவியையும் தமிழக அரசு கோரியிருக் கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரி விக்கிறேன். அங்கே தேவையான அளவு விசைப் படகுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் வந்தால் அவர் களுக்குத் தேவையான தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படு கின்றது. அங்கே தங்குவதற்கு தேவையான இடம், பாரஸ்டு டிபார்ட்மெண்ட் ஊழியர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த அண்ணாமலைச் சேரியைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியிலே இருக்கிற சுற்றுலாப் பயணிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட் டிருக்கிறார்கள். அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள்

அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயிருந்து பறவைகள் எந்தவித கட்டுப்பாடும் இல்லாது அந்தப் பகுதியில் வருவதற்கும், அங்கே தங்கியிருக்கவும், உல்லாசமாக இருக்கவும், அது தவிர அவை மீண்டும் 2, 3 மாதங்கள் இருந்த பின்னர், பறந்து செல்லவும் இருக்கிற ஒரு அற்புதமான பறவைகள் சரணாலயமாக அந்தப் பகுதி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55, திரு. டி. வேலையா, திரு. ப. கலியபெருமாள், திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

55—

தொழில்கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல்

*9690—திரு. டி. வேலையா,
திரு. ப. கலியபெருமாள்,
திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் ஒப்பந்த அடிப்படையில் எத்தனை ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) இவர்களை முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர ஆசிரியர்களாக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆளுமைக்குட்பட்ட அரசினர் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் 82 பேர் போதகர்களாக பணிபுரிகிறார்கள்.

(ஆ) அவர்களது பணியை போதகர் நிலையில் 'இன்ஸ்ட்ரக்டர் கேடர்' வரன்முறைப்படுத்த அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது. அவர்கள் அனைவருக்கும் நேர்காணல் தேர்வு நடத்தி, அவர்கள் பெறும் மதிப்பெண் மற்றும் இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் பெயர்களை